# தமிழ்நாடு தகவல் ஆணையம்

**எண்.19, அரசு பண்ணை இல்லம், பேர்ன்பேட்டை,** (Pension Pay Office **பின்புறம்**),

**நந்தனம், சென்னை– 600 035.** தொலைபேசி எண். 044-29515590


**ஆணை நாள் 07.07.2025**

**முன்னிலை**

**திரு.பி.தாமரைக் கண்ணன், இ.கா.ப.(ஓய்வு),**
**மாநில தகவல் ஆணையர்**

*****

**வழக்கு எண். S.A 1313/விசாரணை/E/2023**

திரு க.செல்வராஜ் .. மேல்முறையீட்டாளர்

*/எதிர்/*

பொதுத் தகவல் அலுவலர்/ .. பொது அதிகார அமைப்பு
உதவி ஆணையர்,
நில நிர்வாக ஆணையர் அலுவலகம்,
சென்னை -5

******

**ஆணை**

1) இவ்வாணையத்தின் 13.11.2024 நாளிட்ட உத்தரவை தொடர்ந்து பொதுத் தகவல் அலுவலர் / சென்னை நில நிர்வாக ஆணையர் அலுவலக உதவி ஆணையர்-5 திரு கு.ச.ராம்குமார் 15.05.2025 அன்று இவ்வாணையத்தின் முன் ஆஜராகி அறிக்கை சமர்ப்பித்தார்.

2) அவ்வறிக்கையில், இவ்வாணையத்தின் உத்தரவுபடி மனுதாரருக்கு இணையவழியில் பட்டா பெறுவதற்குண்டான வழிமுறைகள் குறித்த விவரத்தை 19.11.2024 அன்று பதிவஞ்சலில் அனுப்பப்பட்டதாக தெரிவிக்கப்பட்டு அதன் நகலும், அதை பெற்றுக் கொண்டு மனுதாரர் வழங்கிய ஒப்புகை அட்டையின் நகலும் இணைக்கப்பட்டிருந்தது.

3) மேலும், மனுதாரருக்கு இழப்பீடாக ரூபாய் இரண்டாயிரத்திற்கான வரைவோலை 05.05.2025 அன்று அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டு அதன் நகலும், மனுதாரர் வழங்கிய ஒப்புகை அட்டையின் நகலும் அவ்வறிக்கையோடு இணைக்கப்பட்டுள்ளது.

4) இவ்வாணையத்தின் 13.11.2024 நாளிட்ட உத்தரவுகள் அனைத்தும் நிறைவேற்றுப்பட்டுள்ளதன் அடிப்படையில் இந்த மேல்முறையீட்டு மனுவை முற்றாக்கம் செய்து இவ்வாணையம் உத்தரவிடுகிறது.

**ஒம்/- (பி.தாமரைக் கண்ணன்)**
**மாநிலத் தகவல் ஆணையர்**

**//ஆணையத்தின் ஆணைப்படி//**

**உதவிப் பதிவாளர்**

**<u>வழக்கு எண். S.A.1313/விசாரணை/E/2023</u>**

**<u>பெறுநர்</u>**

பொதுத் தகவல் அலுவலர்/ உதவி ஆணையர்-7
நில நிர்வாக ஆணையர் அலுவலகம்,
எழிலகம், சேப்பாக்கம்,
சென்னை -5

திரு க.செல்வராஜ், த/பெ கந்தசாமி,
எண். 47, கே.எஸ்.பபி இல்லாம்,
இராதாகிருஷ்ணன் நகர்,
உடுமலைப்பேட்டை - 642 126
திருப்பூர் மாவட்டம்

Copy to: File
CR/PA